# பறவைகள் பல விதம்

பலவிதமாய்ப் பறவைகள்
வானத்திலே பறக்குதே
ஒவ்வொரு பறவையும்
பாடம் சொல்லித் தருகுதே
***
அம்மா போலக் கோழியும்
அன்பாய்க் குஞ்சைக் காக்குதே
நேரம் சொல்லும் சேவலும்
விழிப்புணர்வைத் தூண்டுதே
***
குளத்து நீரில்

***

பச்சை வண்ணக் கிளிகளும்
சுதந்திரத்தை உணர்த்துதே
பஞ்சவர்ணக் கிளிகளும்
ஒற்றுமையைக் காட்டுதே

***

மாடத்திலே வெண் புறா
ஒழுக்கத்தையும் உணர்த்துதே
கருப்பு வண்ணக் காகங்கள்
சேர்ந்து வாழச் சொல்லுதே

***

ஊரைச் சுற்றும் வான்கோழி
இரவில் பறக்கும் ஆந்தைகள்
நாரை அன்னம் யாவையும்
பறவைக் கூட்டம் தானம்மா!

Courtesy: Sakthi foundation - Uni5 Education